பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

31 07 2025 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மருத்துவத் துறையில் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை எட்டுவதற்கு மருத்துவத் துறையினர் சிறந்த பங்களிப்பை தர வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம், மேற்குவங்கம், பீஹார், ஒடிசா, ஜார்கண்ட் மாநிலங்களில் 11 ஆயிரத்து 169 கோடி ரூபாய் மதிப்பிலான பல்தட ரயில் பாதை திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்துள்ளது.

3. மொராக்கோ நாட்டுடன் நீதி மற்றும் சட்டத்துறை செயல்பாடுகளுக்கான இருதரப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகி இருப்பதாக மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

4. இந்தியப் பொருட்களுக்கு அமெரிக்க விதித்துள்ள 25 சதவீத வரியால் ஏற்படும் விளைவுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

5. **Macau** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*-- இனி விரிவான செய்திகள் --*

<<<<>>>>

மருத்துவத் துறையில் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை எட்டுவதற்கு மருத்துவர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று குடியசுரத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

ஜார்கண்ட் மாநிலம் தியோகரில் உள்ள எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கிப் பேசிய அவர், மிகக் குறுகிய காலத்திலேயே இந்த எய்ம்ஸ் மருத்துவமனையில் சிசு மரணம் கணிசமான அளவில் குறைக்கப்பட்டுள்ளதற்கு பாராட்டு தெரிவித்தார்.

பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதியில் அமைந்துள்ள இந்த மருத்துவமனை குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு, ரத்தசோகை உள்ளிட்ட பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு வருவதாக அவர் கூறினார்.

பழங்குடியின மக்களுக்கு ஏற்படும் சுகாதார பிரச்சினைகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

வாகனங்கள் செல்ல முடியாத தொலைதூர பகுதிகளுக்கும் ட்ரோன்கள் மூலம் மருந்துகள் கொண்டு செல்லப்பட்டு மகத்தான மருத்துவப் பணியை எய்ம்ஸ் மருத்துவமனை செய்து வருவதாகவும் குடியரசுத்தலைவர் பாராட்டு தெரிவித்தார்.

நாட்டிற்கே முன்னுதாரணமாகவும் இந்த மருத்துவமனை திகழ்வதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம், மேற்குவங்கம், பீஹார், ஒடிசா, ஜார்கண்ட் மாநிலங்களில் உள்ள 13 மாவட்டங்களுக்கான பல்தட ரயில் பாதை திட்டங்களுக்கு மத்திய பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்படி 11 ஆயிரத்து 169 கோடி ரூபாய் செலவில் 574 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரயில் வழித்தடங்களை விரிவாக்கம் செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2028-29ஆம் ஆண்டுக்குள் இந்தத் திட்டப் பணிகளை முடிக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

பீஹாரில் வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்தம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை வலியுறுத்தி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இன்று நாடாளுமன்றத்தில் அமளியில் ஈடுபட்டதால் இரு அவைகளின் நடவடிக்கைகளும் பாதிப்புக்குள்ளாயின.

மக்களவை இப்பிரச்சினை காரணமாக நண்பகல் 12 மணி வரையிலும், பின்னர் 2 மணி மற்றும் 4 மணி வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சினை எதிரொலித்தது.

மத்திய அமைச்சரும், அவை முன்னவருமான திரு. ஜெபி. நட்டா, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா நேற்று மக்களவையில் பதிலளித்துக்கொண்டிருக்கும்போது அதை கவனிக்காமல் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தது தேவையற்றது என்று கூறினார்.

காலை 11 மணிக்கு மாநிலங்களவை கூடியதும், நாசாவும் - இஸ்ரோவும் இணைந்து நிசார் செயற்கைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி அதன் சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தியதற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

அவைத் துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஷ், எதிர்கட்சிகள் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக கொடுத்த ஒத்திவைப்பு தீர்மானங்கள் நிராகரிக்கப்படுவதாக அறிவித்தார்.

தொடர்ந்து கேள்வி நேரத்தை நடத்துவதற்கு அவர் முயற்சி செய்தபோது, எதிர்க்கட்சிகள் பீஹார் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக பிரச்சினை எழுப்பினர்.

இதனால் அவை பலமுறை ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவையிலும், நிசார் செயற்கைக்கோள் வெற்றிகரமாக ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் செலுத்தப்பட்டதற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் கேள்வி நேரம் தொடங்கியபோது காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையின் மையப் பகுதிக்கு வந்து முழக்கமிட்டனர்.

இதனால் அவை நடவடிக்கைகள் இன்று பாதிப்புக்குள்ளாயின.

<<<<>>>>

உற்பத்திக்கான இந்தியா திட்டத்தில் அமைக்கப்பட்ட நாட்டின் முதலாவது ஒரு மெகாவாட் பசுமை ஹைட்ரஜன் ஆலையை மத்திய துறைமுகம் மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால், குஜராத் மாநிலம் **Kandla**-வில் உள்ள தீன்தயாள் துறைமுகத்தில் காணொலி வாயிலாக இன்று தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி ஆலை, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையில் உருவானதாகத் தெரிவித்தார்.

இந்த ஆலையை 4 மாதங்களுக்குள் பயன்பாட்டுக்கு கொண்டுவந்த அனைவருக்கும் பாராட்டு தெரிவித்தார்.

**Bhuj**-ல் அமைக்கப்பட்டு வரும் 10 மெகாவாட் திறன்கொண்ட பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி ஆலையும், நாட்டின் பசுமை எரிசக்தி திட்டத்தின் அடையாளமாகத் திகழும் என்று கூறினார்.

தீன்தயாள் துறைமுகப் பொறுப்புக் கழகம், பசுமை எரிசக்தி திட்டத்தை கொண்டு வருவதற்கு தொடர் முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக அவர் பாராட்டு தெரிவித்தார்.

கடல்சார் பசுமை எரிசக்தி திட்டத்தை முழு அளவில் விரிவுபடுத்துவதற்கனா பணிகளை இந்தியா மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

உலக அளவிலான நீடித்த சுற்றுச்சூழல் இலக்குகளை எட்டுவதில் இதுபோன்ற பசுமை எரிசக்தி திட்டங்கள் முக்கிய பங்கு வகிப்பதாவும் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்கா 25 சதவீத வரி விதித்துள்ளதால் ஏற்படும் பின்விளைவுகள் குறித்து மத்திய அரசு ஆய்வு செய்து வருவதாக வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இது தொடர்பான அறிக்கை ஒன்றை தாக்கல் செய்து பேசிய திரு. கோயல், விவசாயிகள், தொழில்முனைவோர், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமும் இந்தப் புதிய வரிவிதிப்பு குறித்து ஆலோசனைகளைப் பெற்று அவர்களைப் பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

நியாயமான, சமநிலையான மற்றும் பரஸ்பரம் பயனளிக்கக்கூடிய இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் அமையும் என்றும் அவர் கூறினார்.

விரைவாக வளர்ந்து வரும் நாடுகள் பட்டியலில் இந்தியா இடம்பெற்றுள்ளதை குறிப்பிட்ட அவர், உலக பொருளாதார வளர்ச்சியில் 16 சதவீத பங்களிப்பை இந்தியா கொண்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

விரைவிலேயே உலகின் 3வது பெரிய பொருளாதார நாடு என்ற சிறப்பை இந்தியா பெற்றுவிடும் என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளுடன் இருதரப்பு வர்த்தக ஒப்பந்தங்களை இந்தியா இறுதி செய்துள்ளதாகவும் மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் மக்களவையில் தெரிவித்தார்.

மாநிலங்களையிலும் இதே அறிக்கையை திரு. பியூஷ் கோயல் பின்னர் தாக்கல் செய்தார்.

<<<<>>>>

மொராக்கோ நாட்டுடன் நீதி மற்றும் சட்டத்துறையில் பரஸ்பரம் ஒத்துழைப்புக்கான இருதரப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளதாக மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் அவர் அளித்த எழுத்துப்பூர்வமான பதிலில், நீதிமன்றங்களில் இருந்து பிறப்பிக்கப்படும் சம்மன் உத்தரவுகளை செயல்படுத்துவது, நீதித்துறை ஆவணங்களை அளிப்பது கோரிக்கை கடிதத்தின் அடிப்படையில் சாட்சியங்களைப் பகிர்ந்துகொள்வது இருநாட்டு நீதிமன்றங்களில் அளிக்கப்படும் தீர்ப்பை செயல்படுத்துவது உள்ளிட்டவை இந்த ஒப்பந்தத்தில் அடங்கியுள்ளதாக திரு. அர்ஜுன்ராம் மெக்வால் தெரிவித்தார்.

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் தேர்தலுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் இறுதி செய்துள்ளது.

அரசியல் சாசனம் வரையறுத்துள்ளபடி மக்களவை, மாநிலங்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் மாநிலங்களவையின் நியமன உறுப்பினர்கள் அடங்கிய பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இடம்பெற்றுள்ளவர்களின் தற்போதைய முகவரியும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியல் விரைவில் வெளியிடப்படும் என்றும், இதில் இடம்பெற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் ஆணையத்தில் இதனைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஆர்.எஸ்.எஸ். முன்னாள் தலைவர் திருமதி பிரமிளா மேதே இன்று நாக்பூரில் காலமானார். அவருக்கு வயது 97.

வயது மூப்பு மற்றும் உடல்நலக் குறைவு காரணமாக அவர் காலமானதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

ஆவரின் மறைவுக்கு ஆர்.எஸ்.எஸ். தலைவர் திரு. மோகன் பகவத் இரங்கல் தெரிவித்துள்ளார்.

ஆர்.எஸ்.எஸ். இயக்கத்திற்காக அவர் அயராது பாடுபட்டவர் என்று அவர் குறிப்பிட்டார்.

1978ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டு வரை ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் தலைமை செயற்குழு உறுப்பினராகவும், தலைவராகவும் அவர் அரும்பணியாற்றி வந்ததாக தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு மாநிலங்களில் அவரது சேவை போற்றத்தக்கது என்று கூறியுள்ளார்.

மகாராஷ்டிர முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னவிஸ் உள்ளிட்டோரும் அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

பிரமிளா மேதேவின் இறுதிச் சடங்கு நாளை நாக்பூரில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

**Macau** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-14, 14-21, 21-17 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் **Chico Aura Dwi Wardoyo**-ஐ வென்றார்.

--------------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - ராம்குமார் ராமநாதன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை கொலம்பியாவின் **Nicolas Mejia – Cristian Rodriguez** இணையை வென்றது.

----------------

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.

<<<<>>>>